www.agaram.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# க.பொ.த (சாதாரணதரம்)
# ஆண்டிறுதிப்பரீட்சை- 2018
# (045) பரதநாட்டியம் I,II

**கவனிக்க:**

- எல்லாவினாக்களுக்கும் விடைதருக.
- 1-40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியானஅல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை இடுக.

1. நடனத்தின் உட்பிரிவில் அடங்குவது

   1) பாவம் 2) நிருத்தம் 3) தாளம் 4) இசை

2. பாத்திரப் பிராணன்கள்

   1) 10 2) 08 3) 12 4) 06

3. மிஸ்ர ஜாதி ஜம்பைதாளத்தின் அங்கஅடையாளம்

   1) $1_7$00 2) $1_7 1_7$00 3) $1_7$u0 4) $1_7 0 1_7$

4. நாட்டியதர்மியில் அடங்கும் விடயங்கள்

   1) மிகைப்படுத்தப்பட்ட அபிநய வெளிப்பாடு 2) சாதாரண பழக்கவழக்கங்கள்

   3) இயல்பான நடத்தைகள் 4) பாத்திரத்திற்கேற்ற ஆடையணிகள்

5. சங்கீர்ண ஜாதி லகுவின் எண்ணிக்கை

   1) 5 2) 7 3) 8 4) 9

6. ஜமதக்கினிமகரிசியின் மகனாகப் பிறந்தஅவதாரம்

   1) ஸ்ரீராமர் 2)பரசுராமர் 3)கிருஸ்ணன் 4)பலராமன்

7. இடை சுருங்கிய தோற்பறை என்றழைக்கப்படுவது

   1) மிருதங்கம் 2) தவில் 3) உடுக்கு 4) செண்டை

8. தஞ்சைப்பெருங்கோயிலில் வடிவமைக்கப்பட்டுள்ள கரண சிற்பங்கள்

   1) 108 2) 81 3) 18 4) 100

9. மலைப்பிரதேசத்திற்குரிய தொழிலாளர் நடனம்

   1) மீனவர்நடனம் 2) அரிவிவெட்டுநடனம் 3) தேயிலைக்கொழுந்துநடனம் 4) சுளகுநடனம்

10. ஆதிதாளத்தில் நான்கு ஆவர்த்தனங்களில் கோர்வை அமைக்கும் போது அடங்குகின்ற மாத்திரைகளின்எண்ணிக்ககை

    1) 32 2) 64 3) 96 4) 128

11. பந்தனைநல்லூர் பரதநாட்டியபாணியை உருவாக்கியவர்

    1) மீனாட்சிசுந்தரம்பிள்ளை 2) இராமையாபிள்ளை 3) கோபாலகிருஸ்ணர் 4)அருணாசலக்கவிராயர்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

12. கோர்வைகளின் இறுதியில் இடம்பெறும் அடவு அல்லாதது
    1) கோர்வையடவு 2) முடிவடவு 3) தீர்மானஅடவு 4) மகுடஅடவு
13. சதுர முத்திரைக்குரிய விநியோகம்
    1) அழகு 2) நடை 3) பந்து 4) நதி
14. பல்லவி,அனுபல்லவி,சரணம் என்ற பிரிவுகளைக் கொண்ட உருப்படி
    1) அலாரிப்பு 2) ஜதிஸ்வரம் 3) சப்தம் 4) வர்ணம்
15. தித்தெய்ந்ததாதெய் அடவிலுள்ள பாதபேதம் அல்லாதது
    1) சமபாதம் 2) உத்பிளவனம் 3) பிரமரி 4) பாதசாரிகா
16. மட்டக்களப்பு பிரதேசத்திற்குரிய கூத்து அல்லாதது
    1) வடமோடி 2) தென்மோடி 3) காமன்கூத்து 4) மகிடிக்கூத்து
17. கூத்துவடிவமைப்பில் அரங்கேற்றத்திற்கு முந்தியநிலை
    1) ஊருக்குச்செல்லல் 2) சதங்கைஅணிதல் 3) சட்டம்கொடுத்தல் 4) அடுக்குப்பார்த்தல்
18. அலாரிப்பில் “திருகுடுதக”எனும் சொற்கட்டு இடம்பெறுவது
    1) 6 முறை 2) 9 முறை 3) 12 முறை 4) 16 முறை
19. மைத்துனரைக் காட்ட பயன்படுத்தும் முத்திரைகளில் ஒன்று
    1) கடகாமுகம் 2) மயூரம் 3) பதாகம் 4) கர்த்தரீமுகம்
20. மூவடிமண் கேட்டு நின்ற அவதாரம்
    1) வாமணன் 2) நரசிம்மன் 3) பரசுராமன் 4) பலராமன்
21. சங்கமருவியகாலஆடல் பற்றிக் கூறும் இலக்கியங்கள்
    1) இராமயணம் 2) எட்டுத்தொகை 3) சிலப்பதிகாரம் 4) பத்துப்பாட்டு
22. தாளத்திற்குள் அமையாது இராகமாக நீட்டிப் பாடப்படும் தமிழில் அமைந்த உருப்படி
    1) ஸ்லோகம் 2) விருத்தம் 3) பத்யம் 4) பதம்
23. ஜெயதேவரால் ஆக்கப்பட்ட உருப்படி
    1) கீர்த்தனம் 2) பதம் 3) ஜாவளி 4) அஸ்டபதி
24. திரிபுரதாண்டவம் உணர்த்தி நிற்கும் தொழில்
    1) படைத்தல் 2) காத்தல் 3) மறைத்தல் 4) அருளல்
25. 11 வகை ஆடலில் சிவன் ஆடிய ஆடல்
    1) பாண்டரங்கம் 2) அல்லியம் 3) குடைக்கூத்து 4) துடிக்கூத்து
26. பஞ்சரத்தினக் கீர்த்தனைகளுக்கு முதலில் நடனம் அமைத்தவர்
    1) மீனாட்சிசுந்தரம்பிள்ளை2) வழுவூர் இராமையாபிள்ளை
    3) தஞ்சைபொன்னையாபிள்ளை 4) இராமசாமிப்பிள்ளை
27. அம்புவில் வைத்திருப்பதாக அபிநயிக்கப்படும் கடவுள்
    1) இந்திரன் 2) விஸ்ணு 3) மன்மதன் 4) சிவன்
28. சூர்ப்பனகை என்ற பாத்திரத்திற்கு பொருத்தமான ஒப்பனை
    1) தாடி 2) மினுக்கு 3) பச்சை 4) கரி

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

29. பாகவதர் எனும் நடனக்கலைஞர்களுக்குரிய நடனமரபு

1) பரதம் 2) குச்சுப்புடி 3) கதகளி 4) மோகினி

30. ஆடல் மகளிருக்கு தலைக்கோலிப்பட்டம் வழங்கப்பட்ட காலம்

1) சங்ககாலம் 2) சங்கமருவியகாலம் 3) பல்லவர்காலம் 4) ஆங்கிலேயகாலம்

31. வீணையிலுள்ள தந்திகள்

1) 4 2) 6 3) 7 4) 9

32. பெண்கள் ஆடும் கூத்து

1) முன்குரவை 2) பின்குரவை 3) துணங்கை 4) வெறியாடல்

33. சிகர முத்திரை பிடித்து அபிநயிக்கும் பாந்தவ்யஹஸ்தம் அல்லாதது

1) கணவன் 2) மனைவி 3) தம்பதி 4) தந்தை

34. வடமோடிக்கூத்து வெளிப்படுத்தி நிற்கும் ரஸம்

1) சிருங்காரம் 2) வீரம் 3) கருணா 4) பீபத்ஸம்

35. கர்நாடக இசை பயன்படுத்தப்படும் நடனமரபு

1) கதகளி 2) மணிப்புரி 3) குச்சுப்புடி 4)ஒடிசி

36. அலாரிப்பு.......................எனும் தாளத்தில் அமைந்துள்ளது.

1) ஆதி 2) ரூபகம் 3) சதுஸ்ரஏகம் 4) திஸ்ரஏகம்

37. ஒரிஸா நடனத்தில்.........................நிலை முக்கிய இடம்பெறுகிறது.

1) மண்டிய 2) அரைமண்டி 3) திரிபங்க 4) சமபாத

38. சோகத்தை ஸ்தாயி பாவமாகக் கொண்ட ரஸம்...........................ஆகும்.

1) சிருங்காரம் 2) கருணா 3) பயானகம் 4) சாந்தம்

39. புல்லாங்குழல்..................எனும் வகைக்குள் அடங்குகிறது.

1) தோற்கருவி 2) கஞ்சற்கருவி 3) நரம்புக்கருவி 4) காற்றுக்கருவி

40. தாளம் பிடித்த வலதுகை கபித்தம் ...........................கடவுளைக் குறிக்கிறது.

1) விஷ்ணு 2) பிரம்மா 3) இலட்சுமி 4) சரஸ்வதி

(1×40=40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

# பரதநாட்டியம் 11

**முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து,எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**1)** **சுருக்கமானவிடைதருக**

1. வான்கைலாயம் என்று அழைக்கப்படுவது எது?

2.கிடதகதரிகிடதொம் அடவு அமைந்துள்ள தாளம் எது?

3.ஸ்வரபல்லவி என்றழைக்கப்படும் உருப்படி எது?

4.வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் கூத்தை ஆடிப்பழகும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?

5.வழுவூர் இராமையாபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட நூல் எது?

6.சொற்கட்டுக்களால் அமைக்கப்பட்டு சரணத்தில் சாஹித்தியத்தைக் கொண்டமைக்கப்பட்ட உருப்படி எது?

7.மன்மதபாணங்களில் “அரவிந்த” என்பது எம்மலரைக் குறிக்கிறது?

8.சிவப்பு நிறத்தை வெளிக்காட்டும் ரஸம் எது?

9.வர்ணத்தின் உத்தராங்கப்பகுதியில் அடங்கும் பிரிவுகள் எவை?

10.நரம்புக்கருவிகள் இரண்டு எழுதுக. (8+2+2=12 புள்ளிகள்)

**2)** 1.பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் அபிநயத்தை முதலில் வெளிப்படுத்தும் உருப்படி எது?

2.இவ்வுருப்படியின் இலட்சணத்தை எழுதுக.

3.இவ்வுருப்படியின் இராகம் ,தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக.

4.இவ்வுருப்படியின் 1 ஆவது கண்டிகையின் பாடலைத் தாளக்குறியீட்டுடன் எழுதி அதனை அபிநயிக்கும் போது வெளிப்படுத்தப்படும் கருத்தினையும் எழுதுக (2+3+2+6=12 புள்ளிகள்)

**3)** 1. “தஞ்சைப் பெருவுடையான் பேரிசை”எனும் நூலை எழுதியகலைஞர் யார்?
2. இவருடைய வாழ்க்கைக் குறிப்புக்களைச் சுருக்கமாக எழுதுக.
3. இவரால் இயற்றப்பட்ட உருப்படிகள் 4 எழுதுக.
4. இவருடைய கலைத்தொண்டுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(2+3+2+6=12 புள்ளிகள்)

**4)** 1.கதையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பனைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆடப்படுகின்ற சாஸ்திரியநடனம் எது?
2.இந்நடன மரபின் சிறப்புக்கள், தோற்றம் பெற்ற பிரதேசங்கள், ஆடல்முறை, உருப்படிகள் இசை,பக்க வாத்தியங்கள்,பிரசித்திபெற்ற கலைஞர்கள் போன்ற விடயங்களை விபரிக்குக.

(2+10=12 புள்ளிகள்)

**5)**1.“பக்திஇலக்கியகாலம்” என்றழைக்கப்படும் காலப்பகுதி எது, எந்நூற்றாண்டிற்குரியது?

2.இக்காலப்பகுதியில் கலைவளர்ச்சி பற்றி ஆதாரங்களுடன் விபரிக்குக. (2+10=12 புள்ளிகள்)

**6)** பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1.ஏந்தல்நடனம் 2.நவரஸம் 3.நாட்டுக்கூத்து (3×4=12 புள்ளிகள்)

**7)** “பரதநாட்டியக்கச்சேரிக்கு பக்கவாத்தியங்களின் பங்களிப்பு” எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(12 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk